செ.வெ.எண் 112/2017

நாள் - 13/03/2017

# பத்திரிக்கைச் செய்தி

## ஆண்களுக்கான குடும்பநல நவீன கருத்தடை சிகிச்சை முகாம்

ஆண்களுக்கான குடும்பநல நவீன கருத்தடை சிகிச்சை முகாம் கீழ்க்கண்ட மருத்துவ நிலையங்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | நிலையம் | நாள் |
|---|---|---|
| 1. | அரசு மருத்துவமனை, சைதாப்பேட்டை | 17.03.2017 |
| 2. | அரசு ஆரம்ப சுகாதார நிலையம், மேடவாக்கம் | 24.03.2017 |
| 3. | அரசு ஆரம்ப சுகாதார நிலையம், மானாம்பதி | 31.03.2017 |

இம்முறை கத்தி உபயோகப்படுத்தாமலும், தையல், தழும்பு இல்லாமல் புதிய எளிய முறையில் செய்யப்படுகிறது. மருத்துவமனையில் தங்க வேண்டிய அவசியமில்லை. சிகிச்சை முடிந்த ஒரு மணி நேரத்தில் வீட்டிற்கு செல்லலாம். மற்றும் சாதாரண வேலைகளை செய்யலாம்.

நவீன கருத்தடை சிகிச்சை செய்து கொள்ளும் தகுதி வாய்ந்த ஆண்களுக்கு அரசு ஊக்கத்தொகையாக ரூ.1100/-ம், மேலும் ஊக்குவித்து அழைத்து வரும் நபருக்கு ஊக்குவிப்புத்தொகையாக ரூ.200/-ம் வழங்கப்படும்.

மேலும் இம்முறையை ஏற்க விரும்பும் தகுதி வாய்ந்த ஆண்கள் தங்களின் பெயரை முன்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இதன் தொடர்பான விவரங்களுக்கு அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், சுகாதார நிலையங்கள் மற்றும் நகர் நல மையங்களை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு கீழ்க்கண்ட தொலைபேசி எண்களை அணுகவும்

9962081581, 9894820047, 9486620786

மேலும் உத்திரமேரூர், அரசு மருத்துவமனையில் அனைத்து நாட்களிலும் ஆண்களுக்கான நவீன கருத்தடை சிகிச்சை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

ஆண்களுக்கு செய்யக்கூடிய இந்த எளிமையான கருத்தடை சிகிச்சை முறையினை தகுதி வாய்ந்த ஆண்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுமாறு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்கள் இச்செய்தி குறிப்பில் கேட்டுக்கொண்டுள்ளார்.

துணை இயக்குநர் மருத்துவம் (ம)
ஊரக நலப்பணிகள் (ம) குடும்பநலம்,
மாவட்ட குடும்பநலச் செயலகம்,
காஞ்சிபுரம்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம் மாவட்டம்

2/2